கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு **82/2024**

வாதி தரப்பு சாட்சி – 1 **வடிவேல்** என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 5 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. சடைய கவுண்டருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு மனைவிகளுக்கும் குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் 2ம் மனைவியான காளியம்மாளின் மகன் என்றால் சரிதான். எனது தந்தையின் 1வது மனைவியின் பெயர் பார்வதி ஆவார். பார்வதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகள்கள். அவர்கள் முறையே மூக்காயி, சின்னபொண்ணு ஆகும். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் கடந்த 2008ம் வருடம் இறந்தார். எனது தந்தைக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை அவர் உயிருடன் இருந்த சமயத்தில் யாருக்கும் பாகப்பிரிவினை செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. சின்னபொண்ணு மற்றும் மூக்காயி எங்கு உள்ளார்கள் என்றால் சின்னபொண்ணு சென்னையில் உள்ளார். மூக்காயி தற்போது உயிருடன் இல்லை. மூக்காயிக்கு 3 மகன்கள் உள்ளார்கள். எனது தந்தையின் வாரிசு சான்றிதழை பார்த்தால் தான் நான் எனது தந்தையின் சட்டப்படியான மகனா என்று தெரியும் என்றால் சரிதான். நான் எனது தந்தையின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றும், அதனால் தான் எனது தந்தையின் வாரிசு சான்றிதழில் எனது பெயர் இல்லை என்றும், எனவே எனது தந்தையின் வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

3. எனது தந்தையின் பூர்வீக சொத்துக்களில் நான் சட்டபடியான பங்குதாரராக வரமுடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சட்டப்படியான வாரிசுகளை மறைத்துவிட்டு பொய்யாக குடும்ப மேலாளர் என்ற முறையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சடைய கவுண்டர் என்பவரின் குடும்பத்திற்கு நான் குடும்ப மேலாளராக முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

4. தாவா சொத்திற்கு சங்க கவுண்டர் மகன் கருப்ப கவுணடர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அது தவறாக வாங்கப்பட்ட பட்டாவாகும். தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வருவதாக வாக்குமூலம் கொடுத்துள்ள நிலையில், அனுபவம் செய்தால் அனுபவம் செய்வரின் பெயரில் தீர்வை செலுத்தி இரசீது பெறுவது வழக்கம் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நானோ, எனது தகப்பனாரோ சாகுபடி செய்ததற்கான தீர்வை செலுத்தி இரசீது வாங்கியுள்ளோமா என்றால் எனது தாயாரை தான் கேட்க வேண்டும். எனது பெயரிலோ, எனது தகப்பனார் பெயரிலோ தாவா சொத்திற்கு எவ்வித தீர்வை இரசீதும் ஏற்படவில்லை என்றால் எனது தாயாரை தான் கேட்க வேண்டும்.

5. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1ம் பிரதிவாதியின் குழந்தைகள் 2 முதல் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகளும் நானும் ஒரே ஊரை சேர்ந்தவர்களா என்றால் இல்லை. 1 முதல் 5 பிரதிவாதிகள் நவாக்குளம் என்ற ஊரை சேர்ந்தவர்கள். நான் சென்னம்பட்டியை சேர்ந்தவர். சென்னம்பட்டிக்கும் நவாக்குளத்திற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சுமார் 7 முதல் 8 கீ.மீ தூரம் இருக்கும். தாவா சொத்து அமைந்துள்ள இடம் நவாக்குளம் என்றால் சரிதான்.

6. தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயருக்கு எப்போது பட்டா ஏற்பட்டது என்றால் பத்திரம் ஏற்பட்ட பிறகு தான் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்ட விரவம் எனக்கு தெரியும். மேற்படி பத்திரம் ஏற்பட்டதற்கு பின்பு இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் ஏற்பட்ட பின்பு பத்திர அலுவலகத்திற்கு சென்று நகல் போட்டு பார்த்து தெரிந்து கொண்டு அதன் பின்பு இவ்வழக்கை தாக்கல் செய்தேன். நான் மேற்படி நகல் போட்டு வாங்கிய பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை பொறுத்து தவறாக பத்திரம் ஏற்படுத்தியதாக பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன்.

7. பதிவாளர் மீது தனிப்பட்ட நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பட்டா பிரதிவாதி பெயரில் ஏற்பட்டதற்கு வருவாய் துறையில் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. உண்மையில் பட்டா சம்மந்தப்பட்ட பிரச்சனைகளை சரிசெய்யும் அதிகாரமானது வருவாய் துறையினரிடம் தான் உள்ளது என்றால் சரியல்ல. வருவாய் துறையினரிடம் மனு கொடுத்தால் பிரதிவாதியின் உண்மையான உரிமையானது தெரிந்துவிடும் என்பதால் இவ்வழக்கிற்காக தவறாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நான் சொன்ன பத்திரமானது கடந்த 11.07.2024 ல் 1 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்படுத்திய பாகப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரத்தின் நகலை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது.

8. தாவா சொத்து 2ம் பிரதிவாதி சங்கப்பிள்ளைக்கு மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் B பட்டியல் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் 1 முதல் 5 பிரதிவாதிகள் தங்களுக்கு பூர்வீகமாகவும், கிரையமாகவும் பெறப்பட்ட சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்தி கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்து மேற்கண்ட பாக ஆவணத்தின் படி 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட அனுபவ சுவாத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 10.07.2024ம் தேதியன்று நான் வழக்கு சொத்தை சாகுபடி செய்ததாகவும், அப்போது பிரதிவாதிகள் எனக்கு இடையூறு செய்ததாக சொல்லியுள்ள வழக்குமூல சங்கதிகளானது இவ்வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

9. தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல. எனது பாட்டா கருப்ப கவுண்டர் பெயரில் தான் பட்டா உள்ளது. இவ்வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்திற்கு பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் எனது பாட்டா கருப்ப கவுண்டர் பெயரில் இருந்ததை தவறாக மாற்றி 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டிருந்தது. பட்டா மாற்றுவது மற்றும் பெயர் சேர்ப்பது போன்றவை வருவாய் துறையினரால் செய்ய முடியும் என்றால் சரிதான். இவ்வழக்கு தாவா சொத்தினை நான் அனுபவம் செய்து வருவதாகவும், பிரதிவாதிகள்

அதை இடையூறு செய்து வருவதாகவும் பொய்யான சங்கதிகள் கூறி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தால் தாவா சொத்தின் உண்மையான உரிமை மூலம் தெரிந்துவிடும் என்பதால் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

11. விளம்புகை பரிகாரம் கோராத இவ்வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்த நாளில் தாவா சொத்தைநான் அனுபவம் செய்தற்கான ஆவணத்தை தாக்கல் செய்ததால் இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 11.07.2024ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு சொத்து 2ம் பிரதிவாதிக்கு சொந்தமாகி, 2ம் பிரதிவாதியின் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனவே, இவ்வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

12. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி சார்பதிவாளரை மட்டும் தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்பதாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பாக பத்திரம் தவறாக ஏற்படுத்தப்பட்டதாக சார்பதிவாளரிடம் எவ்வித முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்கு உட்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்தில் எனது அனுபவத்தை உறுதி படுத்தும் ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 5 குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

**6ம் பிரதிவாதி குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**